## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | R.L.T.O.P.No.1/2022 | சாட்சி | ம.சா.1 |
| பெயர் | ரங்கநாயகி | நாள் | 11.10.2023 |
| கணவர் பெயர் | ராஜேந்திரன் | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை** :–

1) இம்மனுவில் நான் 4ம் மனுதாரர் என்றால், சரிதான். இம்மனுவின் மற்ற மனுதாரர்களான மரகதம், கார்த்திகேயினி, ஸ்ரீபிரியா ஆகியோர்கள் யார் என்றால், மனு சொத்தை மேற்படி நபர்களிடமிருந்து தான் நான் கிரயம் பெற்றுள்ளேன். தற்போது மேற்படி மரகதம், கார்த்திகேயினி, ஸ்ரீபிரியா ஆகியோர்களுக்கும் சேர்த்து தான் நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேனா என்றால், ஆமாம்.

2) என்ன பரிகாரம் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால், மனு கட்டிடம் மிகவும் பழைய கட்டிடம். மேற்படி கட்டிடம் தற்போது இடிந்து போகும் நிலையில் உள்ளது. அதனால் எதிர்மனுதாரர் கட்டிடத்தை காலி செய்து என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என பரிகாரம் கோரி இம்மனுவினை நான் தாக்கல் செய்துள்ளேன்.

3) மனு சொத்திற்குரிய பிளாக் நெம்பர், வார்டு நெம்பர், நகர புல எண் மற்றும் வரிவிதிப்பு எண், மின் இணைப்பு எண் ஆகியவை குறித்து எனக்கு தெரியுமா என்றால், தற்போது சரியாக நினைவில்லை. மனு சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 1 சென்ட் ஆகும். மனு சொத்து ஆதியில் வெங்கடாச்சலம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

4) மேற்படி வெங்கடாச்சலம் என்பவரது மகன் பெயர் குமரேசன் என்றால், சரிதான். மேற்படி குமரேசனுக்கு வாரிசு அடிப்படையில் இந்த மனு சொத்து பாத்தியப்பட்டது என்றால், சரிதான். மேற்படி குமரேசன் என்பவரது பெயரில் தாவா சொத்திற்குரிய அனைத்து வரி பதிவுகளும் 2009ம் வருடத்தில் தான் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றாலும், நாளது தேதி வரை மேற்படி குமரேசன் பெயரில்தான் வரி செலுத்தப்பட்டு வருகிறது என்றாலும், அதுகுறித்து எனக்கு தெரியாது.

5) மனு சொத்தானது கட்டப்பட்ட சமயத்தில் குடியிருப்பு வீடாகத்தான் கட்டப்பட்டது என்றால், சரிதான். சுமார் 30 வருடங்களுக்கு முன்பு மேற்படி வீட்டின் அமைப்பு கடையாக மாற்றி அமைக்கப்பட்டது என்றால், மேற்படி வீட்டின் ஒரு பகுதியை மட்டும் கடையாக மாற்றம் செய்தார்கள்.

6) தற்போது நிலையில், மனு சொத்தில் தரைதளத்தில் 2 கடைகளும், முதல் தளத்தில் 2 கடைகளும் உள்ளது என்றால், இல்லை. மனு சொத்தில் கீழே இரண்டு மற்றும் மேலே இரண்டு என நான்கு அறைகள் உள்ளன. அதில் மேல் தளத்திலுள்ள இரண்டு அறைகளிலும், கீழ் தளத்திலுள்ள ஒரு அறையிலும் நாங்கள் குடியிருந்து வருகிறோம். கீழ் தளத்திலுள்ள ஒரு அறையை மட்டும் கடையாக வாடகைக்கு விடப்பட்டுள்ளது. நான் மனு சொத்தை விலைக்கு வாங்கும்போதே அவ்வாறு தான் அமைப்பு இருந்தது.

7) என் மனுவிலும், என் முதல் விசாரணை சாட்சியத்திலும் நான் பழைய மார்க்கெட் கதவு எண்.7/116D இந்திரா நகர் என்ற முகவரியை தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். குமரேசன் என்பவர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றினார் என்றால், கேள்விப்பட்டுள்ளேன். மேற்படி குமரேசனும், அவரது வாரிசுகளும் சுமார் 15 வருடங்களுக்கு முன்பே மேட்டூரிலிருந்து ஈரோட்டுக்கு குடிபெயர்ந்து விட்டனர் என்றால், சரிதான்.

8) மேற்படி குமரேசன் என்பவர் 2019 ம் வருடத்தில் பணி ஓய்வு பெற்று பின் 2, 3 மாதங்களில் இறந்துவிட்டார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. மரகதம், கார்த்திகேயினி, ஸ்ரீபிரியா ஆகியோர்கள் மேற்படி குமரேசனின் வாரிசுகள் என்றால், சரிதான். மேற்படி மரகதம், கார்த்திகேயினி, ஸ்ரீபிரியா ஆகியோர்களுக்கு குமரேசனின் வாரிசுகள் என்ற அடிப்படையில் தான் மனு சொத்து பாத்தியப்பட்டது என்றால், சரிதான்.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.